செ. கு. எண்:048 நாள்: 24.04.2017

**புதுதில்லியில் நடைபெற்ற நித்தி அயோக் கூட்டத்தில் தமிழகத்தின் நலன் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலந்து கொண்டு ஆற்றிய உரை சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்துகளுக்கு மறுப்பு அறிக்கை – 24.4.2017**

---

தேசிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகு மத்திய திட்டக் குழு மாற்றியமைக்கப்பட்டு நித்தி அயோக் என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தியது. திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கிடையேயான வேறுபாடுகள் களையப்பட்டு மத்திய, மாநில அரசுகள் வரவு செலவுத் திட்டங்களில் ஒதுக்கீடு செய்யவும், அதற்கேற்ப பல்வேறு அரசு திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் ஐந்தாண்டுத் திட்டங்கள் தேவையில்லை என்ற நிலையில் இதற்கு பதிலாக 15 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டங்களையும், 7 ஆண்டுகளுக்கான செயல்முறை உத்திகளையும், மூன்று ஆண்டுகளுக்கான செயல்திட்டங்களையும் வகுத்து இதுகுறித்து விவாதித்து முடிவு செய்ய நித்தி அயோக்கின் மூன்றாவது ஆளுமை கூட்டம் 23.4.2017 அன்று புதுடில்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் கூட்டப்பட்டது. இந்தக்கூட்டத்தில் எந்தெந்த பொருண்மைகளைப் பற்றி விவாதிக்கவேண்டும் என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு அதன் அடிப்படையில்தான் விவாதமும் நடைபெற்றது. அக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப குறிப்பிட்ட விவாதப் பொருள்களில் மாநில அரசு ஆற்றிவரும் பணிகளையும், மத்திய அரசின் திட்டங்களில் மாநில அரசின் கருத்துக்களையும், விரிவாக நான் எடுத்துரைத்தேன்.

இதுபற்றி கருத்து தெரிவித்த மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள், தமிழகம் சந்தித்து வரும் மிகப்பெரிய கடன் சுமை பற்றியும், நிதி நெருக்கடி பற்றியும் நித்தி அயோக் கூட்டத்தில் விவாதிக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மத்திய மாநில அரசுகளின் நிதி நிலை பற்றியும், கடன் அளவு பற்றியும் அந்தக் கூட்டத்தில் விவாதிப்பதற்கான நிகழ்ச்சி நிரலில் பொருள் இல்லை என்பதனால், இதுபற்றிய கருத்துக்கள் என்னுடைய பேச்சில் இடம்

பெறவில்லை. எனினும், மாநில அரசின் கடன் பற்றியும், நிதிநிலை பற்றியும் கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தில் மிக விரிவாக பேசப்பட்டதை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நன்கு அறிவார். ஒரு அரசின் கடன் என்பது அந்த கடன் அளவை விட மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவு எவ்வளவு உள்ளது என்பதே கடன் சுமையின் சரியான அளவுகோல் என்பதே பலமுறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 31.3.2017 அன்றைய நிலவரப்படி தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் உட்பட மாநில அரசின் பொதுக்கடன் 2.72 லட்சம் கோடி ரூபாய் என்றும், பொது நிறுவனங்களின் கடன் 94,000 கோடி ரூபாய் என்றும் எடுத்துரைக்கப்பட்டதோடு, இந்தக் கடன் அளவு மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 20.90 சதவீதம் மட்டுமே என்றும், ஆனால் தமிழ்நாட்டிற்கு வரையறுக்கப்பட்ட அளவு 25 சதவீதம் என்றும் ஏற்கனவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் பதிலுரையில் விரிவாக எடுத்துரைத்தார்கள். இதுமட்டும் அல்லாமல், இந்தியாவிலேயே குறைந்த அளவு கடன் வைத்துள்ள முதல் ஐந்து மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி விரிவாக பலமுறை விளக்கப்பட்டும் அது புரியாததுபோல் தமிழ்நாட்டின் கடன் சுமை அளவு அதிகரித்து உள்ளது என்றும், நிதி நெருக்கடியில் தமிழகம் உள்ளது என்றும் திரும்பத் திரும்ப கூறுவது வேடிக்கையாக உள்ளது. தூங்குபவர்களை எழுப்பலாம். ஆனால் தூங்குபவர்கள் போல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது. எனினும், இந்த விவரங்களை மக்கள் நன்கு அறிவார்கள் என்றாலும், ஒரு தவறான தகவல் மக்கள் மனதில் பதியக்கூடாது என்பதற்காக மீண்டும் இந்த விளக்கத்தை அளிக்கிறேன்.

தேசிய அளவில் உருவாக்கப்பட வேண்டிய தொலைநோக்குத் திட்டம் பற்றி விவாதிப்பது தான் இந்தக் கூட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். தமிழ் நாட்டில் இது போன்ற தொலை நோக்குத் திட்டம் ஏற்கனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டிற்காக உருவாக்கப்பட்ட தொலை நோக்குத் திட்டத்தைப் பற்றி நான் இந்தக்

கூட்டத்தில் விரிவாகக் குறிப்பிட்டேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ் நாட்டின் மீதும், தமிழ் மொழியின் மீதும் மிக்க மதிப்பு வைத்துள்ளார் என்பது அவர் நித்தி ஆயோக் கூட்டத்தில் தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் மொழியைப் பற்றியும் சிறப்பாகக் குறிப்பிட்டதில் இருந்து தெளிவாகிறது. "ஒரே நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும், சில நேரங்களில் நம் நாட்டைப் பற்றிய புரிதல் இல்லாமல் இருக்கின்றோம். அதனால் மாநிலங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இரண்டு மாநிலங்களை இணைக்க வேண்டும். உதாரணத்திற்கு, தமிழ் மொழி ஒரு வளம் மிக்க மொழி. உண்மையிலேயே, தமிழ் மொழி, நம் இந்தியத் திருநாட்டின் வளத்திற்கு வலிமை சேர்க்கின்றது என்பதை நாம் அறியாமலேயே இருக்கலாம்."

''தமிழ் நாட்டுடன் ஏதாவது ஒரு மாநிலம் ஏன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது? அந்த மாநிலத்தின் குழந்தைகள் 5 தமிழ் பாடல்களும், தமிழில் 100 வாக்கியங்களும் கற்றுக் கொள்ளட்டும். தமிழ் எழுத்துக்களை பார்த்து புரிந்து கொள்ளட்டும். அம்மாநிலத்தில் தமிழ் திரைப்பட விழா நடத்தப்படட்டும். அவ்விரு மாநிலத்தைச் சேர்ந்த குழந்தைகளிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படட்டும். அம்மாநிலத்தின் குழந்தைகள் தமிழ் நாட்டிற்கு சுற்றுலா செல்லட்டும்.'' எனக் குறிப்பிட்டு இருந்தார்.

மேலும் தொலைநோக்குத் திட்டம் 'விஷன் 2023' பற்றி விரிவாக இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளபோதிலும், அத்திட்டத்தில் மாநில அரசு ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை என்றும் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொலைநோக்குத் திட்டம் 'விஷன் 2023' என்பது நீண்டகாலத் திட்டம் ஆகும். இத்தகைய தொலைநோக்குத் திட்டத்தை தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரவில்லை. மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இப்படிப்பட்ட தொலைநோக்குத் திட்டத்தை கொண்டுவந்து, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டும் என்ற திட்டத்தை வகுத்தார்.

அதன்படி அதில் குறிப்பிட்டுள்ள பல திட்டங்களை சீரிய முறையில் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

ஏற்கெனவே சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது தெரிவித்தவாறு தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023ன் கீழ் பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 217 அடிப்படை கட்டமைப்பு வசதிகள் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் என்ற தொலைநோக்குத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டது. இதுவரை 85 திட்டங்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 17 திட்டங்களுக்கான பணிகள் ஒப்பந்தப்புள்ளி கோரும் நிலையை அடைந்துள்ளன. 26 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை (DPR)/விரிவான சாத்திய கூறு ஆராய்வு (Detailed Feasibility Study) தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய 89 திட்டங்கள் பல்வேறு திட்ட வடிவமைப்பு நிலைகளில் தற்போது உள்ளன.

டெல்லியில் போராடிவரும் விவசாயிகளின் சார்பாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வது பற்றி பேசப்படவில்லை என்றும், ஹைட்ரோ கார்பன் திட்டத்தைப் பற்றி பேசவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். ஹைட்ரோ கார்பன் திட்டத்தை ரத்து செய்வது பற்றி நான் சென்ற முறை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை 27.2.2017 அன்று சந்தித்தபோதே இது குறித்து விரிவாக எடுத்துரைத்து, கடிதத்தையும் வழங்கியுள்ளேன். இது சம்பந்தமாக, தமிழ்நாடு அரசு விவசாயிகளைப் பாதிக்கும் இந்தத் திட்டத்திற்கு எந்தவொரு அனுமதியும் வழங்காது என்பதை நான் பலமுறை தெளிவுபடுத்தி உள்ளேன். இந்த முறை நித்தி அயோக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்போதும் விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட கோரிக்கைகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் மூலமாகவும், நேரிலும் வலியுறுத்தியுள்ளேன். விவசாயிகளின் பாதிப்புகளையும் அவர்களின் கோரிக்கைகளையும் என்னுடைய உரையிலும் தெரிவித்துள்ளேன். இதை

முழுமையாக தெரிந்துகொள்ளாமல் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அரசியல் நோக்கோடு குறை கூறியுள்ளார்.

தாமிரபரணி–நம்பியார் திட்டம் என்பது தமிழ்நாடு மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கின்ற திட்டம். இத்திட்டம், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. நித்தி அயோக் கூட்டத்தில் தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் பற்றி விரிவாக நான் பேசியுள்ளேன். இது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய கோரிக்கை என்பதனால், அதை நான் வலியுறுத்திப் பேசினேன். அவிநாசி–அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கோயம்புத்தூர் வருகை தந்தபோது நேரிலேயே வலியுறுத்தினேன். இதன்மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அத்திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. அதற்காக 2017–18 ஆம் நிதியாண்டில் முதற்கட்டமாக 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் நான் என்னுடைய உரையில் தமிழகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த எந்த ஒரு பிரச்சனையையும் எழுப்பவில்லை என்கிற ஒரு பொதுவான குற்றச்சாட்டை கூறியுள்ளார். இது ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டு ஆகும். திரு. ஸ்டாலின் அவர்கள் என்னுடைய உரையை சரியாக படிக்கவில்லை என்று நினைக்கிறேன். ஏன் என்றால், என் உரையில் 20ஆம் பத்தியில் தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி பற்றியும், 21ஆம் பத்தியில் காவேரி பிரச்சனைப் பற்றியும், 22ஆம் பத்தியில் நதிகள் ஒருங்கிணைப்புத் திட்டம் பற்றியும், 24ஆம் பத்தியில் விவசாயிகளுக்கு உடனடியாக பயிர்க் காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டுமென்கிற கோரிக்கையும், 25ஆம் பத்தியில் தமிழ்நாட்டைச் சார்ந்த மீனவர்கள் சம்பந்தமான பிரச்சனைப் பற்றியும், 29ஆம் பத்தியில் தமிழ்நாட்டில் சுகாதார சேவைகள் தொடர்ந்து பொதுத் துறை மூலமாகவே வழங்கப்பட வேண்டுமென்கிற கருத்தையும், 30ஆம் பத்தியில் நீட் (NEET) தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையும் மற்றும் 31,

33,34,35, 36, 37 ஆம் பத்திகளில் பல்வேறு மத்திய அரசு திட்டங்கள் மூலம் தமிழகத்திற்கு போதுமான நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதை பற்றியும் தெரிவித்துள்ளேன். எனவே, இந்த நித்தி ஆயோக் ஆளுமை குழுவின் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதப் பொருள்கள் சம்பந்தமாக தமிழகத்தில் தற்போது உள்ள முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி நான் என்னுடைய உரையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன். அனைத்து பத்திரிகைகளும், ஊடகங்களும் என் உரையில் எவ்வாறு மாநிலத்தின் உரிமைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதை பற்றி விரிவான செய்திகள் வெளியிட்டுள்ளன.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் விடாமுயற்சிகளின் காரணமாகவும், தமிழ்நாடு அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் காரணமாகவும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு 17.4.2017 அன்று மத்திய அரசு டிஜிட்டல் உரிமம் வழங்கி உள்ளதையும் இங்கு நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அ.தி.மு.க அரசுக்கு நல்ல பெயர் வந்துவிட்டது என்கிற அச்சம் மற்றும் பொறாமையின் காரணமாக ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை திரு. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார். என் உரையை நன்கு படித்துப்பார்த்தால் எந்த வகையில் தமிழ்நாட்டில் அரசு செயல்பட்டு வருகிறது என்றும், மாநிலத்தின் பல்வேறு முக்கியமான பிரச்சனைகள் குறித்து நான் நித்தி அயோக் கூட்டத்தில் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன் என்பதும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்களுக்குத் தெரிகிறதோ இல்லையோ, தமிழக மக்களுக்கு நன்றாகப் புரியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**